DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
OS NO.13/2014
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | :**மீனா** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 27.03.1991 A.செல்லத்துரை அவர்களுக்கு நல்லச்சாமி பவர் ஏஜெண்ட் நிலையில் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் **வா.சா.ஆ.1** ஆகும். 26.11.1997 வாதிக்கு A.செல்லத்துரை எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். பிராதின் தபசில் சொத்துக்குரிய கணிணி பட்டா எண்.2500 நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது) **வா.சா.ஆ.3** ஆகும். எனவே பிராதுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது சம்மந்தமாக நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் கிரையம் வாங்கிய இடத்தினை 1997ம் ஆண்டு வாக்கில் பார்த்த போது 1ம் பிரதிவாதி உழுதிருந்தார். அதன் பின் அவர்தான் தொடர்ந்து உழுது கொண்டு வருகிறார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் விபரம் சொன்னேன். இந்த சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மால்கள் சரியானது தான். நான் சர்வே எண்.526/8 ல் 1 ஏக்கர் 30 செண்டு 528/1 ல் 2 ஏக்கர் 65 செண்டு ஆக மொத்தம் 3 ஏக்கர் 95 செண்டு நிலத்தில் ராமசாமி நகரில் பிளாட் எண்.52 ஐ நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் 2 மற்றும் 3 வது வகுப்பு தான் படித்துள்ளேன். பிளாட் எண்.51 க்கு மேற்கு என்று தான் மால் காட்டியுள்ளேன். வழக்குரையில் 4ம் பத்தியில் தபசில் சொத்தின் கீழ்புறத்தில் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்கு மாலில் கீழ்புறம் பிளாட் எண்.51 உள்ளதாக சொல்லியுள்ளேன் எனவே நான் வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் சொத்து கீழ்புறம் உள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் தெரியாது. நான் கிரையம் பெற்றுள்ள பிளாட் அரசிடம் அங்கிகாரம் பெறப்படாத லேஅவுட் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை 1997 ல் கிரையம் வாங்கியுள்ளேன். தாவா சொத்திற்கு எனது பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது. எனது கூட்டு பட்ட எண் ஞாபகம் இல்லை. அந்த கூட்டு பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூட்டுபட்டாவை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தீர்வை ஏதும் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி என்னுடைய பிளாட்டினை 2013 செப்டம்பர் மாதத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளதை பொறுத்து நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதாக கூறி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்து ஆணையர் அறிக்கை மற்றும் புலப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். **புலப்படத்துடன் கூடிய ஆணையர் அறிக்கை நீதிமன்ற சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது கிழக்கே 1ம் பிரதிவாதியின் இடத்தில் இருந்து தான் அளந்து வந்தார் என்றாலும் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது சர்வே எண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 செண்ட் நிலம் முழுவதும் ஒரே காலியிடமாக தான் இருந்தது என்றால் எனக்கு தெரியாது எனது கணவர் தான் சென்றிருந்தார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது பிளாட்டுகளை காட்டக் கூடிய எல்லை கற்கள் இல்லாமல் இருந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை பற்றி என்னிடம் கூறினார். அதற்கு எனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்துக்கள் மனை சொத்துக்களாக பிரிக்கப்பட்டதற்கு வருவாய் துறை ஆவணங்களில் பதிவுகள் இல்லை என்றும் அதனால் வழக்கு சொத்தினை மனுவில் கண்ட விபரப்படி அளந்து காண்பிக்க இயலவில்லை என அளவையர் தெரிவித்ததாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மீண்டும் மாவட்ட அளவையர் மூலம் சொத்தை அளக்க வேண்டும் என ஆணையர் மறு நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின் நான் உயர்நீதிமன்ற கிளையில் சீராய்வு மனு எண்.1698/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவும் மதுரை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான்.

அதன் பின்னர் தாவா சொத்தை பிரித்து தர வேண்டும் என பரிகாரத்தை திருத்தும் பொருட்டு சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவை பின்னர் திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. அதன் பின்னர் 1ம் பிரதிவாதியின் சொத்தினையும் சேர்த்து அளக்க வேண்டும் என ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வாங்கியுள்ள பிளாட்டானது கிழமேல் 30 அடி தென்வடல் 56 அடி அளவுள்ளது என்றால் சரிதான். அதன் கீழ் புறம் உள்ள பிளாட் எண் 51ம் அதே அளவு உள்ளது தான். எனக்கு செல்லத்துரை என்பவர் கிரையம் கொடுத்தார். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி செல்லத்துரைக்கு பவர் ஏஜண்ட் நல்லசாமி கிரையம் கொடுத்துள்ளார். வா.சா. ஆ.1 மற்றும் வா.சா.ஆ 2 ஆவணங்களில் கீழ்புறம் மாலாக பிளாட் எண்.51 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லசாமிக்கு பவர் எழுதி கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி புல எண்.528/2 ஏயில் உள்ள 2 ஏக்கர் 22 செண்டு நிலத்தில் கீழ் கடைசியில் உள்ள 95 செண்ட் நிலத்தினை அப்பாசாமி பிள்ளை குமாரர் இராஜரத்தினம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி மொத்தமாக மாட்டு வியாபரம் செய்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவரது சொத்தில் மாட்டு தீவனமாக சோளநாற்று பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு தண்ணீர் பாசணம் கிடையாது. மானாவாரியாக பயிர் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு வடபுறம் ஸ்பின்னிங் மில் உள்ளது என்றால் சரிதான். அது மில் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. அது சர்வே எண். 528/1ல் ஒரு பகுதியாக உள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிளாட்டின் முந்தைய பாத்தியஸ்தரான குருசாமி நாயக்கரின் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தானது ஆதியில் முப்பிடாதி செட்டியார் மனைவி மணியம்மாள் என்பவர் 27.10.1992ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி மணியம்மாளிடம் இருந்து அப்பாசாமிபிள்ளை குமாரர் இராஜரத்தினம் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் மேற்படி இராஜரத்தினத்திடம் இருந்து 1ம் பிரதிவாதி அவருடைய சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு தனியாக உட்பிரிவு ஏற்பட்டு சர்வே எண்.528/12 என உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் மேல்புறத்தில் வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தான பிளாட் எண்.52 ஐ கிரையம் பெற்ற பிறகு நான் அங்கு செல்லவில்லை. தாவா சொத்திற்கு நான்கு மால்கள் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் 4 நபர்களுக்கு உள்ள பிளாட்டுகள் உள்ளது வேறு நபர்களுக்கு உள்ளது பற்றி எனக்கு தெரியாது. அந்த நான்கு நபர்கள் யார் யார் என்று கேட்டால் அசல் வழக்கு எண்.10/2014 ன் வாதி அய்யனதேவரை மட்டும் தான் தெரியும் மற்றவர்களை எனக்கு தெரியாது. நான் வாங்கிய பிளாட் எண்.52 எங்கு அமைந்துள்ளது என்பதை ஒரு தடவை மட்டும் தான் பார்த்தேன். அதன் பின்னர் அசல் வழக்கு எண்.10/2014 ன் வாதி அய்யனதேவர் மட்டும் தான் பார்த்து வந்தார். நான் வாங்கிய பிளாட் எண்.52 எங்கு உள்ளது என்பது தெரியாமலேயே 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சொத்தை எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.